எக்கிகள் ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5 00

கடர: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 புரட்டாதி 21 வியாழக்கிழமை (07 10 1993) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 313

# இன்றைய போர்க்காலச் சூழலில் ஆசிரியரின் பங்கு முக்கியமானது

## ஆசிரியர் தினத்தையொட்டி தலைவர் பிரபாகரன் செய்தி

யாழ்ப்பாணம், ஒக்டோபர் 7

**எமது சமூகத்தின் கல்வி வளர்ச்சியைச் சீர்குலைத்து, எமது தேசிய வாழ்வையும், வளத்தையும் சீரழித்து, எமது நிலத்தை ஆக்கிரமித்து, எம்மை இன ரீதியாக அழித்தொழிக்க எமது எதிரியானவன் இன்று பெரிய முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றான். இந்த இக்கட்டான போர்காலச்சூழலில் ஆசிரிய சமூகத்தின் பொறுப்பும் பங்கும் முக்கியமானவை.**

உலக ஆசிரியர் தினத்தை முன்னிட்டு தமிழீழ தேசியத் தலைவர் திரு. பிரபாகரன் நேற்று விடுத்த வாழ்த்துச் செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்த வாழ்த்துச் செய்தி நேற்று குடாநாட்டில் நோட்ட மட்டத்திலும், பாடசாலைகள் மட்டத்திலும் நடைபெற்ற ஆசிரியர் தின விழாக்களில் வாசிக்கப்பட்டது

வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:—

சமூகத்தின் சிற்பிகள்

மனித சமூகங்களின் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் எல்லாமான

இம்மண்ணிலேயே வாழ்வுக்கும் ஆதாரமாக அமைவது கல்வி.

அந்தக் கல்வியை இளஞ் சமுதாயத்துக்கு ஊட்டுகின்ற உன்னத பணியை ஆசிரியர் சமூகம் மேற்கொண்டு வருகிறது.

சமூகத்தின் சிற்பிகளாக சமூகத்தின் மேம்பாட்டுக்கு உழைத்துவரும் ஆசிரியப் பெருந்தகைகள் பாராட்டுக்குரியவர்கள்.

சகல நெருக்டிகளுக்கும் சவால்களுக்கும் முகம் கொடுத்து எமது தேசத்தின் அறிவிச் சுடரான கல்வியை அணைந்து விடாது பாதுகாப்பது ஆசிரிய சமூகத்தின் தலையாய பொறுப்பாகும்.

அத்துடன், எமது சமூதாயத்தின் விடிவை இலட்சியமாகக் கொண்டு முன்னெடுக்கப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஆசிரியர் தின விழாக்கள் சிறப்புற நடைபெற்றன

யாழ்ப்பாணம், ஒக். 7

உலக ஆசிரியர் தினம் நேற்று யாழ்ப்பாண மாவட்டத்தில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது

பாடசாலை மட்டத்திலும், கோட்ட மட்டத்திலும் ஆசிரியர் தினம் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. காலையில் அந்தந்தப் பாடசாலையிலும், பிற்பகலில் கோட்ட மட்டத்திலும் நடைபெற்ற விழாக்களில் தமிழீழத் தேசிய தலைவர் திரு. வே. பிரபாகரன் விடுத்த செய்தி வாசிக்கப்பட்டது.

பாடசாலைகளில் பெற்றோர்கள், நலன் விரும்பிகள், பழைய மாணவர் சங்கத்தினர், அபிவிருத்தி சங்கத்தினர், மாணவர்கள் சேர்ந்து ஆசிரியர்களை கௌரவித்து விழா எடுத்தனர். பாடசாலைகள் இன்று ஒரே கலகலப்பாக இருந்தன. விதிவிலக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கோமாரியிலும் வாதுவவிலும் பயணிகள் செல்ல அனுமதி

யாழ்ப்பாணம், ஒக். 7

பருத்தித்துறைக்கு வரும் 'கோமாரி', 'வாதுவ' கப்பல்களில் ஒரு தொகுதி பயணிகள் திருகோணமலைக்குச் செல்ல புனர்வாழ்வு அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகரின் கோரிக்கையையடுத்து இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அரச ஊழியர்கள் மற்றும் அவசர தேவைக்கு கொழும்பு செல்பவர்களுக்கே இந்தக் கப்பல்களில் இடம் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

நற்சமயம் பருத்தித்துறையில் பொருள் இறக்கும் பணியில் ஈடுபடுகின்ற 'கோமாரி' பொருள்கள் இறக்கி முடிந்த பொழுதும் பாலும் ஞாயிறு அல்லது திங்கட்கிழமை திருகோணமலைக்கு புறப்படும் என்றார்—

இக்கப்பலில் செல்ல பதிவு செய்தவர்களை இன்று செயலகத்தில் சமூகமளித்து தமது பயணத்தை உறுதி செய்யுமாறும் — மேலதிக அரச அதிபர் கேட்டுள்ளார்.

கொழும்பில் இருந்து கடுத்த வாரம் பருத்தித்துறைக்கு வந்து சேர விருக்கும் 'வாதுவ' கப்பலிலும் பொருள்கள் இறக்கி முடிந்ததும் ஒரு தொகுதி பயணிகள் திருமலைக்கு அழைத்துச் செல்லப்பட விருக்கின்றனர். (உ-8)

## அரசின் அடக்குமுறையை எதிர்த்து பணி புரிபவர்கள் ஆசிரியர்கள்

### தமிழ்ச்செல்வன் பாராட்டு

யாழ்ப்பாணம், ஒக் 7

தற்போதுள்ள நெருக்கடி வரை — இக்கட்டான — சூழ்நிலையில் இருந்து தப்பித்துக் கொள்வதற்காக, பலதரப்பட்டவர்களும் இம்மண்ணில் இருந்து வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். எனினும் ஆசிரியர் சமூகத்தை சேர்ந்தவர்கள் எதிரியின் அடக்குமுறைகளை உடைத்தெறிந்து, கல்விதான் எங்களுடைய முழு மூச்சு என்று இம்மண்ணிலேயே செயற்பட்டு வருவது பாராட்டப்படவேண்டிய ஒன்றாகும்.

இவ்வாறு தெரிவித்தார் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. தமிழ்ச்செல்வன்.

தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையினால் ஏற்பாடு செய்யப்பட்டு நேற்றுக் காலை யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெற்ற "விளக்கு" சஞ்சிகை வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு ஆசியுரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையின் தலைத் தலைவரும் யாழ் இந்துக் கல்லூரியின் அதிபருமாகிய திரு. அ. பஞ்சலிங்கம் தலைமையில் விழா நடைபெற்றது.

திரு தமிழ்ச்செல்வன் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

எதிரி அண்மையில் எமது கண் முன்னே ஒரு யுத்தத்தைப் பிரகடனப் படுத்தியிருந்தான். எம் சகோதரர்கள் 80 பேரின்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கோபாலசாமியை நீக்கும் முயற்சிக்கு கடும் எதிர்ப்பு

### தி.மு.கவின் நேற்றைய கூட்டம் நடைபெறவில்லை

சென்னை, ஒக், 7

வை.கோபாலசாமியை கட்சியிலிருந்து நீக்குவது குறித்து முடிவு செய்ய நேற்று நடத்தப்படுவதாக இருந்த தி.மு.கவின் மாவட்டச் செயலாளர்களின் கூட்டம் திடீரென்று நடைபெற முடியாமல் போயிற்று.

கோபாலசாமியை வெளியேற்றும் முயற்சிக்கு கட்சிக்குள் கடும் எதிர்ப்பு எழுந்திருப்பதே இதற்குக் காரணமாகும்.

கட்சியின் 21 மாவட்டச் செயலாளர்களில் 9 பேர் கோபாலசாமியை வெளியேற்றுவதை தாங்கள் எதிர்ப்பதாகத் தெரிவித்துள்ளனர் என தி.மு.க தலைமைப் பீடத்துக்குச் சமர்ப்பித்துள்ளனர்.

கோபாலசாமியை விலக்கி விட்டு, காங்கிரஸுடன் கூட்டு அமைக்க தி.மு.க. திட்டமிட்டிருக்கிறது என்ற ஐயம் இதனால் இப்பொழுது சிக்கலில் வந்து நிற்பதாக பி.பி.ஸி தெரிவித்தது.

கோபாலசாமிக்கு ஆதரவான மாவட்டச் செயலாளர்கள் [illegible] பேரும் [illegible]

(6 ஆம் பக்கம் பார்க்க)

## அல்லிப்பளை கடற்கரையில் உடல் சிதறிய படையினரின் சதைத் துண்டங்கள் புதைப்பு

உயிரிழந்த படையினருடைய எனக் கருதப்படும் சதைத் துண்டங்கள் சிறு பெட்டி ஒன்றில் அடைக்கப்பட்டு, அல்லிப்பளை கடற்கரையில் படையினரால் புதைக்கப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

கடந்த சனிக்கிழமை இரவு அல்லிப்பளையில் இடம் பெற்ற கண்ணிவெடித் தாக்குதலில் உடல்சிதறி உயிரிழந்த படையினரின் சதைத் துண்டங்களாக அவை இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

மேற்படி புதைகுழியில் கம்பி ஒன்று நடப்பட்டு அதில் இராணுவ வீரரின் சின்னம் குத்தப்பட்டிருந்தது. (உ117)

## 9 தினங்கள் பலாலியில் தங்கிய டாக்டர் குழு

யாழ்ப்பாணம், ஒக். 7

கடந்த மாதம் 27 ஆம் திகதி வரை மூலம் பலாலிக்கு வந்த யாழ். ஆஸ்பத்திரி மற்றும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலக டாக்டர்கள் அடங்கிய குழுவினர் 9 தினங்கள் அங்கு தங்கியிருந்து பின் நேற்று 'கோமாரி' கப்பல் மூலம் பருத்தித்துறையை வந்தடைந்தனர்.

இவர்கள் பலாலிக்கு வந்து சேர்ந்த பின்னர் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டதால், அங்கிருந்து பருத்தித்துறைக்கு வருவதற்கு இணைப்பு கப்பல் வசதி கிடைக்காத நிலையில் இவர்கள் பலாலியில் தங்க வேண்டியதாயிற்று.

அவர்கள் கோழுவு திரும்பிவிட்டதாக முன்னர் தவறாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் அவர்கள் எல்லோரும் பலாலியிலேயே தங்கி இருந்தபின் நேற்று இங்கு திரும்பினர்.

இதேவேளை — கடந்த வாரம் 'நரோமா' கப்பல் மூலம் காங்கேசந்துறைக்கு வந்த பயணிகள் திருமலைக்குத் திரும்பிச் சென்றுவிட்டதாக அவர்கள் தெரிவித்தனர். (உ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவாந்துறை கலைவாணி வி.க. நடத்தும்
ஏழுபேர் கொண்ட அணிகளுக்கிடையிலான
உதைபந்தாட்டம்

கழக மைதானத்தில் இன்று
பி.ப. 3 30 மணி:- நாவாந்துறை சென் நீக்கிலஸ் 'ஏ' எதிர் ஆறுகால்மடம் அறிவொளி 'ஏ'
பி.ப. 4 30 மணி:- குருநகர் பாடும் மீன் 'ஏ' எதிர் நாவாந்துறை சென். மேரிஸ் 'பி'
(27573)

THE BOARD OF DIRECTORS
JAFFNA COLLEGE
INSTALLATION SERVICE
of
Mr. G. Rajanayagam B. A. (Lond.) Dip Ed., M. A. (Princeton)
as
PRINCIPAL, JAFFNA COLLEGE
at
Cathedral Church, Vaddukoddai
on Saturday the 9th October, 1993 at 3 30 p m.
Parents, alumni, Friends and Well Wishers are Cordially Invited.
C. V. SELLIAH,
Secretary.
(C-6178)

உளவளத்துணை நிலையம்
சீட்டிழுப்பு முடிவு

| | |
|---|---|
| முதலாவது பரிசு | 04736 |
| இரண்டாவது பரிசு | 03743 |
| மூன்றாவது பரிசு | 01545 |

ஆறுதல் பரிசுகள்

| | |
|---|---|
| 14184 | 13423 |
| 14488 | 03597 |
| 12649 | 13691 |
| 13046 | 02539 |
| 04765 | 14009 |

அதிர்ஷ்டசாலிகள் தயவுசெய்து தங்களுக்குரிய பரிசுச் சீட்டுக்களுடனும் அடையாள அட்டையுடனும் 11-10-93 அன்று காலை 10 மணிக்கும் 12 மணிக்கும் இடையில் 'சாந்தியகம்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.
தங்கள் ஒத்துழைப்பிற்கு நன்றிகள் பல
பணிப்பாளர்,
15, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.
(27569)

4ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி

அமரர்
வைத்திலிங்கம் வேலுப்பிள்ளை
(அண்ணாவியார்)
[யாழ்ப்பாணக் கல்லூரி காவலாளி]
மறைவு: 04-10-1993

யாழ்ப்பாணக் கல்லூரியே உலகம் என்றும்,
அதன் அதிபரே அரசன் என்றும்
மாணவரே பிள்ளைகள் என்றும்
வாழ்ந்து முடிந்த அண்ணாவியார்
அதிபரையும் குடும்பத்தினரையும்
கண்கண இமைபோல காத்து வந்த பேரானா!
யாருக்குப் பகைவனெனினும்
யாருக்கு நண்பனெனினும்
வளர்கதிரோன் விடமாட்டாய்
துணிவு கொண்ட அண்ணாவி
கல்லூரிப் பெருமையிதே நிமிர்ந்து நின்ற அண்ணாவி
கல்லூரித் துயரிலே அழுதுவிட்ட அண்ணாவி
மறைந்து விட்டாய் சடுதியாக
யாழ்ப்பாணக் கல்லூரி இருக்கும்வரை உன் நினைவு போகாது
போய்வாரும் அண்ணாவி
கண்ணீருடன் விடை கொடுத்தோம்.

யாழ்ப்பாணக் கல்லூரி
(சி/6177) அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,

92 - 93 கல்வி ஆண்டில்

# பல்கலைக் கழகங்களில் மொத்தம் 7,918 மாணவர்களுக்கு அனுமதி

கொழும்பு, ஒக். 7

1992 - 93 ஆம் கல்வி ஆண்டுக்கான பல்கலைக் கழகங்களுக்கு 7,918 மாணவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

1991 ஜி. சி. ஈ. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டிலும் பார்க்க இந்த ஆண்டு 184 மாணவர்கள் அனுமதிக்கப்பட்டனர்.

மருத்துவம், பொறியியல் மற்றும் விஞ்ஞான பீடங்களுக்கு கூடுதலான மாணவர் அதிகமாக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

உயர்கல்வி அமைச்சர் திஸ்ஸ அத்தநாயக்கா இத்தகவல்களை நேற்று செய்தியாளர் மாநாட்டில் வெளியிட்டார்.

யாழ். பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடத்தைத் தவிர ஏனைய மருத்துவ பீடங்கள் அனைத்திலும் கூடுதலான மாணவர் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள் என்றும் அவர் கூறினார்.

யாழ். பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடத்தில் 160 மாணவர்கள் அனுமதிக்கப்படக் கூடிய வசதிகள் இருக்கின்ற போதிலும் 58 மாணவர் மட்டுமே பல்கலைக்கழக அனுமதிக்குத் தேவையான தகைமையைப் பெற்றுள்ளார்கள். ஏனைய பல்கலைக் கழகங்களின் மருத்துவ பீடங்களுக்கு 828 மாணவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஆகக் குறைந்தபட்ச புள்ளிகள் பற்றி அல்லாது அனுமதிக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை பற்றியே பல்கலைக்கழக மான்ய ஆணைக் குழு முடிவு செய்யும் என்றும் அமைச்சர் கூறினார். (இ-எ)

## ஆலயங்களில்

சாவகச்சேரி தரிக்கை அம்மன் கோயிலில் நாளை வெள்ளிக்கிழமை முதல் ஞாயிற்றுக்கிழமை வரை மகாசண்டி ஹோம உற்சவம் நடைபெறும். (உ-30)

o o o

கரவெட்டி பகுதி பிரதேச புலோலி சாரையடியில் உள்ள ஆண்டான் வேளாங்கண்ணி ஆலயத்தில் இன்று வியாழக்கிழமை புனித செபமாலை அன்னையின் பெருவிழாவையொட்டி திருப்பலியும், அன்னையின் திருக்கரம் ஆசீரும் இடம்பெறும். (உ-173)

## பட்டி மன்ற சுற்றுப் போட்டி

யாழ்ப்பாணம், ஒக். 7

யாழ் மாவட்டத்தில் இன்டறக் கழகம் உள்ள பாடசாலைகளுக்கிடையில் பட்டிமன்றச் சுற்றுப்போட்டி ஒன்று நடத்தப்படவுள்ளது.

இதன் முதலாவது சுற்றுப் போட்டி இன்று வியாழக்கிழமை மாலை, இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும். (இ)

## கருத்தரங்கும் களப் பயிற்சியும்

யாழ்ப்பாணம், ஒக். 7

திருநெல்வேலியில் இயங்கும் பலாலி ஆசிரிய கலாசாலை நாடகக் கருத்தரங்கும், களப் பயிற்சியும் இன்று முதல் மூன்று தினங்கள் நடைபெறும்.

யாழ் பல்கலைக் கழக நுண்கலைத் துறை, யாழ் நாடக அரங்கக் கல்லூரி ஆகியவற்றின் ஆதரவுடன் கலாசாலை அரங்கில் இது நடைபெறும்.

ஆசிரிய கலாசாலை அதிபர் திரு. ஆர். எஸ். நடராசா இதற்குத் தலைமை வகிப்பார்.

இறுதி நாளான சனிக்கிழமை வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. இராசுந்தரலிங்கம் சான்றிதழ்களை வழங்குவார். (இ)

## பனை கொத்தணி பாடசாலைகள்

யாழ்ப்பாணம், ஒக். 7

பனை கொத்தணிப் பாடசாலைகள் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் வழமை போல நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## பரிசுத் தினம்

கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலய வருடாந்த பரிசளிப்புத் தின நிகழ்ச்சிகள் இன்று வியாழன் பிற்பகல் 1.30 மணிக்கு ஆரம்பமாகும்.

கல்விப்பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் பிரதம விருந்தினராகவும் யாழ் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. வேலாயுதம், உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. டி. ஆர். அருமைநாயகம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும், அருண்மாலர் கௌரவ [illegible] கலந்து கொள்ளவுள்ளனர்.

திருமதி தேவராணி சுந்தரலிங்கம் பரிசில்களை வழங்குவார். (ஒ-17)

## விவசாயிகளுக்கு ஓய்வூதியம் வழங்கும் வைபவம் இன்று

யாழ்ப்பாணம், ஒக். 7

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 21 விவசாயிகளுக்கு ஓய்வூதியம் வழங்கும் வைபவம் இன்று வியாழன் பிற்பகல் 2 00 மணிக்கு யாழ் செயலகத்தில் நடைபெற உள்ளது.

இந்த வைபவத்துக்கு யாழ். அரசாங்க அதிபர் திரு. வ. மாணிக்கவாசகர் தலைமை வகித்து, விவசாயிகளுக்கான ஓய்வூதியப் புத்தகங்களையும் காசோலைகளையும் கையளிப்பார். (இ-121-100)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணக் கல்லூரி லியோ கழகம் "டாக்டர் டபிள்யூ. ஆர். ஹோம்ஸ்" கற்றுக் கேடயத்துக்காக நடத்தும் கூடைப்பந்தாட்டக் கற்றுப் போட்டியின் இறுதி ஆட்டங்கள் இன்று பிற்பகல் 3 மணி முதல் யாழ்ப்பாணக் கல்லூரி ஆடுகளத்தில் நடைபெறும். பிரதம விருந்தினராக வலி. ஆர். இராமச்சந்திரனும் விசேட விருந்தினர்களாக யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் திரு. ஜி. இராஜநாயகம், வைத்தியர் டி. பகீரதன் ஆகியோரும் கலந்து கொள்வர். (உ-20)

o o o

பண்டத்தரிப்புக் கோட்ட பாடசாலைகளின் 19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையில் நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி இன்று பிற்பகல் 3 மணிக்கு கழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

## வாக்களிப்பு மூலம் எம். பி வெளியேற்றம்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த மொனறாகல மாவட்ட எம். பி சாமினி விஜேமுனி சொய்ஸா நேற்று நாடாளுமன்றத்தில் இருந்து வெளியேற்றப்பட்டார்.

ஒதுக்கப்பட்ட நேரத்துக்கு மேல் தொடர்ந்து பேசியதை அடுத்தே நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டு இவர் ஒரு வாரகாலம் நாடாளுமன்றக் கூட்டங்களில் கலந்து கொள்ளத் தடை விதிக்கப்பட்டது.

இவரை வெளியேற்றும் தீர்மானத்துக்கு ஆதரவாக 61 எம். பிக்களும் எதிராக 17 எம். பிக்களும் வாக்களித்தனர். (இ)

யாழ். நகர் சகலதுறை
வர்த்தகர்களுக்கும், ஊழியர்களுக்கும்
யாழ். வர்த்தகர் சங்கம் விடுக்கும்
ஓர் முக்கிய அறிவித்தல்

நாளை 08 - 10 - 93 வெள்ளிக்கிழமை பிற்பகல் 5.00 மணிக்கு யாழ்நகர் சகலதுறை வர்த்தகர்களுக்கும், ஊழியர்களுக்கும் ஓர் முக்கிய கலந்துரையாடல் யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும். முக்கிய பிரமுகர்கள் பலர் கலந்து கொள்வதால் கூட்டத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து யாழ்நகர் சகலதுறை வர்த்தகர்களும் ஊழியர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு பணிவன்புடன் வேண்டுகிறோம்.

நன்றி, வணக்கம்.

இங்ஙனம்,
வே. சிற்சபேசன்,
தலைவர்.
(இ-6179)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்மராட்சி பகுதி எங்கும் வழமை நிலை திரும்புகிறது

## நேற்று கடைகள் திறப்பு; சந்தைகள் கூடின

தென்மராட்சி, ஒக். 7

யாழ்தேவி இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து சோபை இழந்து காணப்பட்ட தென்மராட்சிப் பகுதி வழமை நிலைக்குத் திரும்பி வருகிறது!

இடம் பெயர்ந்திருந்த மக்கள் தமது சொந்த இடங்களுக்குச் சாரிசாரியாக திரும்பி வந்த வண்ணம் உள்ளனர். வாகனங்களில் பொருள்களை ஏற்றிக் கொண்டும், தலையில் மூட்டை முடிச்சுகளைச் சுமந்தபடி காலநடையாகவும் மக்கள் தமது வீடுகளுக்குத் திரும்பிக் கொண்டிருக்கின்றனர்.

சாவகச்சேரியில் நேற்று அரச செயலகங்கள், வங்கிகள் போன்றவை பழைய இடங்களிலேயே மீண்டும் செயற்படத் தொடங்கின. வர்த்தக நிலையங்கள் திறக்கப்பட்டிருந்தன. தென்மராட்சியில் பல இடங்களிலும் சந்தைகள் கூடின. மக்கள் நடமாட்டமும் அதிகரித்து காணப்பட்டது.

கொடிகாமம், பளைப்பகுதிகளிலும் நிலைமை சீரடைந்து வருகிறது. ஆனால் அரசமற்றிருந்த பளைப் பகுதியில் நேற்று சகஜ நிலைமை காணப்பட்டது. அங்கிருந்து வெளியேறிச் சென்றிருந்த மக்கள் திரும்பி வந்தபடி உள்ளனர்.

குண்டுச் சத்தங்களால் அதிர்ந்தபடி இருந்த தென்மராட்சிப் பகுதி, கடந்த இரண்டொரு தினங்களாக அமைதியாகக் காணப்படுகிறது.

(ஒ-117)

# நவக்கிரியில் வீடுகளில் பொருள்கள் திருட்டு

யாழ்ப்பாணம், ஒக்7

கடந்த 29 ஆம் திகதி இடம் பெற்ற இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து நவக்கிரிப் பகுதியில் பெரும் அளவில் திருட்டுக்கள் இடம் பெற்றுள்ளன.

படையினர் திரும்பிச் செல்வதற்கு முன், சில வீடுகளில் இருந்த பணம், மற்றும் பெறுமதிவாய்ந்த பொருள்களை அபகரித்துச் சென்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இராணுவ நடவடிக்கையின் போது இராணுவத்தின் பிடியில் சிக்கிய வயோதிபர் ஒருவர், படையினர் தம்மிடமிருந்த 16 ஆயிரம் ரூபாவை எடுத்துச் சென்று விட்டனர் என்று தெரிவித்துள்ளார்.

மேலும் பல வீடுகள் உடைக்கப்பட்டு பெறுமதி வாய்ந்த பாத்திரங்களைப் பொருள்கள், தங்கநகைகள், பத்துக்கும் மேற்பட்ட நீர் இறைக்கும் இயந்திரங்கள், கோழிகள் மின்சாரம், அரிசி போன்ற உணவுப் பொருள்களும் திருடப்பட்டுள்ளன.

இராணுவ நடவடிக்கை, ஷெல் தாக்குதல்கள் காரணமாக நவக்கிரியில் இருந்து பெரும்பாலானோர், வெளியேறியதைப் பயன்படுத்தி உள்ளூர் திருடர்களால் இந்த திருட்டுக்கள் இடம் பெற்றிருக்கலாம் என நம்பப்படுகிறது (இ-15)

# றுகுணுவில் வந்த உரவகை காங்கேசனில் சோதனை

யாழ்ப்பாணம், ஒக். 7

காங்கேசன்துறையில் தரித்தநின்ற 'றுகுணு' கப்பலில் ஏற்றப்பட்டிருந்த உரம் துறைமுகத்தில் இறக்கப்பட்டு தரு வித் தருவி கடற்படையினரால் சோதனையிடப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

கொழும்புத் துறைமுகத்தில் இக்கப்பலில் 'யூரியா' ஏற்றப்பட்டது கண்டுபிடிக்கப் பட்டதாகவும் —

அவை இறக்கப்பட்ட பின்னர் கப்பல் வடக்கே செல்ல அனுமதிக்கப்பட்டதாகவும். முன்னர் செய்திகள் வெளியாகியிருந்தது [தெரிந்ததே.

பருத்தித்துறைக்கு வந்த இக் கப்பலில் மேல் தளத்தில் இருந்த] பொருள்கள் இறக்கப்பட்டன.

கப்பல் மீண்டும் காங்கேசன் துறைக்குச் சென்றதை அடுத்து அடித்தளத்தில் இருந்த உர வகைகள் அதிகு இறக்கப்பட்டு தருவித் தருவிச் சோதனையிடப்படுவதாகத் தற்போது தெரிவிக்கப்பட்டது. (உ-3)


## அறிவித்தல்

### வட இலங்கைச் சங்கீத சபை புதிய பாடத்திட்டம்

மேற்படி சபை நடத்தும் செய்முறை, அறிமுறைத் தேர்வுகளுக்கான புதிய பாடத்திட்டம் வெளிவந்து விட்டது. 1994ஆம் ஆண்டு தொடக்கம் நடைபெறும் தேர்வுகளுக்கு புதிய பாடத்திட்டம் நடைமுறைக்கு கொண்டு வரப்படவுள்ளது. பாடத்திட்டப் பிரதிகள் கொள்வனவு செய்யவிருப்புவோர் சபைப் பணிமனையில், காரியாலய நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். பிரதி ஒன்றின் விலை ரூபா 100/- (நூறு)

இ. சுந்தரலிங்கம்,
யாழ். மாவட்டக் கல்வி பணிப்பாளரும்,
வட இலங்கைச் சங்கீத சபைத் தலைவரும்.

(இ-6203)


# சிக்காக்கோ மாநாட்டின் நூற்றாண்டு விழா கல்கத்தாவில்

## 10,000 பிரதிநிதிகள் பங்குபற்றினர்

கல்கத்தா, ஒக் 7

சுவாமி விவேகானந்தரின் சிக்காக்கோ நூற்றாண்டு விழா செப்டம்பர் மாதம் 11, 12, 18, 19ஆம் திகதிகளில் கல்கத்தாவில் உள்ள நேதாஜி அரங்கில் நடைபெற்றது.

ஸ்ரீராமகிருஷ்ண மடத்தின் பன்னிரண்டாவது தலைவர் வணக்கத்துக்குரிய நவத்திரு. சுவாமி பூதேஷானந்தர் மகராஜ் விழாவுக்குத் தலைமை வகித்தார்.

உலகின் நாலா பக்கங்களிலும் இருந்தும் மொத்தம் பத்தாயிரம் பிரதிநிதிகள் இந்த நான்கு நாள் விழாவில் கலந்து கொண்டனர். உலக நாடுகளில் இயங்கும் ஸ்ரீராமகிருஷ்ணர் மடங்களின் தலைவர்களும் மற்றும் சமய அறிஞர்களும் இவர்களில் அடங்குவர்.

இலங்கையிலிருந்து, கொழும்பு ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் தலைவர் நவத்திரு. ஆத்மகணானந்தர் மகராஜ் தலைமையில் 74 பிரதிநிதிகள் கல்கத்தா மாநாட்டில் கலந்து கொண்டனர். மருதித்துறை ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம சுவாமி சித்ருபானந்தா யாழ்ப்பாணத்திலிருந்து சென்றிருந்தார்.

ஸ்ரீராமகிருஷ்ண சங்கத்தின் உப தலைவர் நவத்திரு சுவாமி ரங்கநாத் ஆனந்தர் மகராஜ் மாநாட்டில் சிறப்புரை ஆற்றினார்.

சங்கப் பொதுச் செயலாளர் நவத்திரு ஆத்மஸ்தானந்தா மகராஜ் வரவேற்புரையும், விழா அமைப்பாளர் நவத்திரு சோகேஸ்வரானந்த மகராஜ் நன்றியுரையும் நிகழ்த்தினர்.

"சுவாமி விவேகானந்தரின் சர்வமதக் கோட்பாடும் எதிர்கால விளைவுகளும் திட்டங்களும்" என்பது பற்றிய கருத்தரங்கு விழாவின் முக்கிய அம்சமாக அமைந்தது.

அமெரிக்கா, இங்கிலாந்து, ரஷ்யா, ஆஸ்திரேலியா, தோஹனி, இந்தியா, நியூஸிலாந்து ஆகிய நாடுகள் உட்பட பல நாடுகளில் இருந்து வந்த பிரதிநிதிகள் பலரும் சுவாமி விவேகானந்தரைப் பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரைகளை வாசித்தனர்.

விழாவையொட்டி சுவாமி விவேகானந்தரின் சிக்காக்கோ படம் கொண்ட முத்திரையும் வெளியிடப்பட்டது.

(உ)

# மிதி வெடியில் கால் இழப்பு

யாழ்ப்பாணம், ஒக். 7

விறகு வெட்டச் சென்ற வயோதிபர் ஒருவர் மிதிவெடியில் சிக்குண்டு இடது கால் பாதம் துண்டிக்கப்பட்டார்.

அனலைதீவு வடக்கில் செவ்வாய் மாலை 5 மணிக்கு இடம்பெற்ற இச்சம்பவத்தில் அனலைதீவு வடக்கில் இருந்து இடம்பெயர்ந்து இணுவிலில் வசிக்கும் வேலுப்பிள்ளை இளையதம்பி (வயது 60) என்பவரே கால் துண்டிக்கப்பட்டவராவார். (உ-15)

வவுனியா மாவட்டத்தில்

# கால்நடைகளுக்கு நோய்; தடுக்க அவசர நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 7

கால்நடைகளுக்கு ஏற்படும் திடீர் நோயினால் தற்போது வவுனியா மாவட்டத்திலே கால்நடைகளின் இறப்பு விகிதம் அதிகரித்துக் கொண்டு வருவதாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் தெரிவிக்கிறது.

கால்நடைகளின் தொடைப் பகுதி திரவியாக விறைத்துக் காணப்படுவதுடன் வாயால் இரத்தம் கலந்த நுரை வெளியேற 24 மணித்தியாலங்களுக்குள்ளும் சில கால்நடைகள் வயிறு வீங்கி 3 அல்லது 3 மணித்தியாலங்களுக்குள்ளும் இறந்து விடுவதும் இதன் அறிகுறிகளாகத் தென்படுகின்றன.

குறிப்பிட்ட நோய்களை இனம் காணாமல் பொருட்டு மிருக வைத்திய திணைக்களம் அதிகாரிகள் நோய் தென்படும் இடங்களுக்குச் சென்று பார்வையிட்டு தடுப்பு நடவடிக்கைகளை உடன் மேற்கொள்ளும்படி தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் திணைக்களத்தை கோரியுள்ளது. (ஒ)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

நூலக உதவியாளர் தரம் III பதவிக்கான விண்ணப்பங்கள் கொழும்பிலுள்ள அமேசிசர்களிடமிருந்து 1993-11-01 ஆம் திகதிவரை என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

சம்பள அளவுத்திட்டம்:

ரூபா 2745 - 10 X 55 — 7 X 65 - 3750/- (மாதமொன்றிற்கு)

தகைமைகள்:

1. ஐந்து வருடங்களில் நிறைவுச் சித்திகளுடன் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாமல் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். நிறைவுச் சித்திகளில் இரண்டு சிங்களம் / தமிழ் / ஆங்கிலமொழி அல்லது இலக்கியத்தில் இருத்தல் வேண்டும்.

அல்லது

2. மூன்று தடவைகளுக்கு மேற்படாது க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆறு பாடங்களில் சித்திகளுடன் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் அல்லது உயர் கல்வி நிறுவனமொன்றின் நூலகத்தில் 5 ஆண்டுகள் திருப்திகரமான நிரந்தர சேவை பெற்றிருத்தல் வேண்டும். சித்திகளில் இரண்டு சிங்களம் / தமிழ் / ஆங்கிலமொழி அல்லது இலக்கியத்தில் இருத்தல் வேண்டும்.

வயது:

40 ஆண்டுகளுக்கு மேற்படலாகாது.

குறிப்பு:

நூலகவியல் தகைமைகளையும்/அல்லது நூலக அனுபவத்தையும் உடையவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

தெரிவு:

உளச்சார்பு பரீட்சை மூலமும் நேர்முகப் பரீட்சை மூலமும் நடைபெறும்.

மேற்குறித்த பதவிகளுக்கான விண்ணப்பப் படிவங்களை ஒவ்வொரு விண்ணப்பப்படிவத்திற்கும் நிதிக்கிளையில் 20/- ரூபாவைச் செலுத்திய பின்னர் கிரேட்டா உதவிப் பதிவாளர் (தாவளங்கள்) அலுவலகத்தில் பெற்றுக் கொள்ள வேண்டும். தபால் மூலம் படிவங்களைப் பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் / நிதியாளர் பெயரில் பெறப்பட்ட 20/- ரூபா பெறுமதியான காசுக் கட்டளை / தபாற் கட்டளையுடன் சுயமுகவரியிட்டு 1/- ரூபா முத்திரையொட்டப்பட்ட 23 X 10 செ. மீ. அளவுடைய கடிதவுறையை அனுப்புதல் வேண்டும். விதிக்கப்பட்ட படிவத்தில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மாத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும்.

அரசாங்க திணைக்களங்கள், அரச கூட்டுத் தாபனங்கள், நிபந்தனச் சட்ட சபைகளின் விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

விண்ணப்ப முடிவு திகதியின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்களும் விபரங்கள் தெளிவின்றிக் குறிப்பிடப்படுவன விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

— பதிவாளர்.

யாழ்ப்பாணப் - பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1993 - 09 - 28

(சி-6202)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### நூல் விற்பனை

ஆலய வழிபாடும், தத்துவமும் — உயர்வகுப்பு மாணவர்களுக்கும், பக்தர்களுக்கும் முக்கியமான நூல் சிவஸ்ரீ நி. சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் B. A. குருநிலையால் ஆக்கப்பட்டது. கிடைக்குமிடம்: பூபாலசிங்கம் புத்தகசாலை, மக்மிலன் புத்தகசாலை, மண்டேலா புத்தகசாலை, சிலோன் டிஸ்ரிபியூட்டேஸ், ஸ்ரீலங்கா புத்தகசாலை யாழ்ப்பாணம், ஸ்ரீகாந் புத்தகசாலை நல்லூர், திருக்கணித நிலையம், சாவகச்சேரி. (27567)

### சாக்கு, பை விற்பனை

எமது தொழிற்சாலையில் பாவித்த சாக்குகளும், பைகளும் விற்பனைக்குண்டு. வாங்க விருப்புவோர் கடிதவிலை சமர்ப்பிக்கவும். மொத்த முகாமையாளர், யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், திருநெல்வேலி. (இ-6201)

### விற்பனையாகின்றது

GCE O/L வகுப்புக்கான தமிழ், விஞ்ஞானம், சமூகக் கல்வி, ஆங்கிலம் ஆகிய பாடங்களின் 10 மாதிரி வினாத்தாள்களும், 5 வினாத்தாள்களுடன் விடைகளும் விலை ரூபா 90/-: உயர்கல்வி பதிப்பக வெளியீடு: கிடைக்கும் இடம்: பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (இ-6156)

### கருவாடு கொள்வனவு

எமது தொழிற்சாலைக்கு காரல் மீன் கருவாடு தேவை. வழங்கக்கூடியவர்கள் விலையைக் குறிப்பிட்டு கடிதம் அனுப்பி வைக்கவும். மொத்த முகாமையாளர், யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், திருநெல்வேலி. (சி-6009)

### இலவச திருமண சேவை

51 வயது, Non R/C, பூரா டம், ஜேர்மனியில் உள்ள மணமகனுக்கு ஏற்ற மணப்பெண் தேவை. இலங்கையில் திருமணம் செய்து அழைக்கலாம். தொடர்பு: ஞானிறு காலவிக். விமலா, இலவச திருமண சேவை, யாழ். நாச்சிமார் கோவிலடி. (27535)

### திருத்தவேலைகளுக்கு

உங்கள் சைக்கிள்கள், றேடியோக்கள் அனைத்தும் நிபுணர்களால் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். டிக்கா றேடியோ ஆன்ட் வோச் வேக்ஸ், 284, பிறாக்லி வீதி, (வானொலி அருகில்) யாழ்ப்பாணம். கிளை: கண்டி வீதி, சாவகச்சேரி. (இ-6176)

### தவறிவிட்டது

ரேவதி ஆகிய நான் திருநெல்வேலி சந்தியூடாக வரும் வழியில் 4-10-93 இல் நடைபெற்ற ஷெல் தாக்குதலின் போது தேவை அடையாள அட்டை அடங்கிய சிறிய கைப்பை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் க. தம்பிராசா, ஏழாலை வடக்கு என்ற முகவரியில் ஒப்படைக்கவும். (6681)

### வாங்குகிறோம்

சத்தமான வேப்பம் விதை, வேப்பம் கோது, இலுப்பம் விதை விலைக்கு வாங்குகிறோம். "மிக்கவை" (இ-620)

### மரநடுகை

விதையாரம்பத்திற்கு ஏடுகள், மரநடுகைக்கு மரக்கன்றுகள் தருகிறோம். மரக்கன்றுகள் பதிக்க அவசிய மாக வெற்றுப் பாலிதீன் பைகள் தந்து உதவுங்கள். "மிக்கவை" (சி-6205)

**SPOKEN ENGLISH**
**BY**
**BRITTO**
புதிய பிரிவு ஆரம்பம்
**09 - 10 - 1993**
சனி
(11மணி)
**புதிய உயர் கல்லூரி**
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
(இ-6167)

## முதலாம் வருட நினைவஞ்சலி

ஜனனம்: 07 — 08 — 1976

மரணம்: 18 — 08 — 1992

**இராமச்சந்திரன் கோணேஸ்**
(சில்லாலை றோ. க. பாடசாலை மாணவன்)

நேற்று எங்களுடன் ஒருவனாகச்
இன்று இறை பரம் ஆனாய்.

திரு. திருமதி பி, கபிரியேல்பிள்ளை,
கௌரி, நிமலன்,
(வளர்த்த பெற்றோர், சகோதரர்)

'றோசவனம்'
சில்லாலை,
மண்டைதீவு, (6509)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக் கிரியைகளும்



தோற்றம்: 26 — 05 — 1922

மறைவு: 07 — 09 — 1993

**திருமதி தம்பு பொன்னம்மா**

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

கட்டுவனைச் சேர்ந்த தம்பு பொன்னம்மாவின் 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக் கிரியைகளும் இன்று 07-10-1993 அவரது இல்லத்தில் நடைபெறும்.

தம்பு ரவீந்திரன் (மகன்)

உத்தரோடை,
உடுவில். (6683)

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின்
மாபெரும்
## இசை நாடக விழா

போர் நேரங்கள் எம்மை திடீரென சூழ்ந்து கொண்ட காரணத்தால் 29-09-1993 இடைநிறுத்தம் பட்ட நிகழ்ச்சிகளான "ராஜன்" இசைக் குழுவினரின் "இசை அமுதம்", S G. சாந்தன், V. செல்வம் இணைந்து வழங்கும் "சத்தியவான் சாவித்திரி" ஆகிய நிகழ்வுகள் இன்று (7-10-93) வியாழக்கிழமை நடைபெறும்.

உயர்தர மாணவர் மன்றம்
மகாஜனக் கல்லூரி
(27563)

## தென்னிந்திய திருச்சபை
யாழ். பேராயம்
## "PLEASANT COTTAGE"
(Senior Citizens' Home)
## முதியோருக்கான இல்லம்

மக்கிளியோட் வைத்தியசாலை வளவில்
பேராயர் ஆதி வண. கலாநிதி க. ஜெபநேசன்
அவர்களால்

7ஆம் திகதி (வியாழன்) ஒக்டோபர் 1993 அன்று பிற்பகல் 4 மணிக்கு அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படும்.

மேலதிக விவரங்களுக்கு பின்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

N. A. விமலேந்திரன்,
கூட்டுபவர்
உளவளதுணை திட்ட குழு,
J. D. C. S. I.

ஆதீன காரியாலயம்,
வட்டுக்கோட்டை. (இ-6175)

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம்: 18 — 12 — 1939

மறைவு: 08 — 09 — 1993

அமரர்
**நா. சுப்பிரமணியம் இராசேந்திரன்**
(பிறப்பு, இறப்பு பதிவாளர், வல்வெட்டித்துறை, விவசாய பதிவாளர், வடமராட்சி)

எமது குடும்பத் தலைவரின் மறைவுச்செய்தி கேட்டு, பல வழிகளிலும் எமக்கு உதவிகள் புரிந்தோருக்கும், அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டு ஆத்ம சாந்தி வேண்டி பிரார்த்தித்து நின்ற அனைவருக்கும் எங்களின் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நாளை வெள்ளிக்கிழமை (08-10-1993) அன்று அதிகாலையில் எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும், நண்பகலில் நடைபெறும் வீட்டுக் கிரியைகளிலும் கலந்து கொண்டு இறப்பிற்கு வரும் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்புடன் நினைவு கூரும்:
மனைவி, பிள்ளைகள், மருமகன்,
உறவினர், நண்பர்கள்

சாந்தி வீதி,
தெடிகமம்,
வல்வெட்டித்துறை. (இ-5997)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளாலிப் பகுதியில் அரச படையினர் விட்டுச் சென்ற அழிவுப் பதிவுகள்

## உதயன்

### வாழ்வதற்கான போராட்டம்

தமிழீழ மக்களைப் பொறுத்தளவில் போராடுவதான் தான் வாழ்வுண்டு. நாம் இணைந்து போராடி எல்லையும் எதது குடும்பத்தவர்களையும், எமது ஊர்களையும் பாதுகாப்போம்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறை விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு கூறைகூவி விடுக்கப்பட்டுள்ளது.

இன்னல்களுக்குச் சுதந்திரம் கிடைத்த காலத்திலிருந்தே தமிழர்கள் தமது உரிமைகளுக்காகப் போராட வேண்டியதாயிற்று. ஆகிம்சைப் போராட்டம் பயனளிக்காத நிலையில் இராணுவ அடக்கு முறைக்கு எதிராகத் தமிழர்களும் ஆயுதம் ஏந்தினர்.

எழுபதுகளில் முளைவிட்ட தமிழர்களின் ஆயுதப் போராட்டம் 1983 ஆம் ஆண்டுடன் வேகமாக வளரலாயிற்று. கடந்த பத்து வருடங்களில் அது பன்முகப் பரிமாணங்களையும் உற்பவித்துள்ளது.

எனினும் ஆயுத, ஆட்பலத்தால் இராணுவ மேலாண்மையை நிலைநாட்டி உரிமைப் போராட்டத்தை — ஆயுதப் போராட்டத்தை — நசுக்கி, தமிழர்களை இன அழிப்புச் செய்து அவர்களை அடிமை கொள்ள வேண்டும் என்ற தனது கோட்பாட்டையும் அதற்கான செயற்பாட்டையும் ஸ்ரீலங்கா அரசு நிறுத்தவில்லை.

திரு. டி. பி. விஜேதுங்கா ஜனாதிபதியாகப் பதவியேற்ற கடந்த ஆறு மாதங்களில் நிலவரமோ மேலும் மோசமடைந்தது. நமட்டில் இனப்பிரச்சினை எதுவுமே இல்லை. இராணுவத்தீர்வே தனது வழியென்று ஜனாதிபதி முடிவு கட்டுவார்.

அந்த முடிவின் பின்னர் இராணுவம் முன்னரைவிடத் துள்ளிக் குதிக்கிறது. தமிழர்களையும் அவர்தம் சொத்துக்களையும் எப்படியும் அழித்து விட வேண்டும். எதனைச் செய்தாவது தமிழர் பிரதேசத்தைக் கைப்பற்றிவிட வேண்டும் என்று கருதி தனது சக்திக்கு உப்பட்ட சகலவிதமான கொடுமைகளையும் புரிந்து வருகிறது.

கடந்த வாரம் நடைபெற்ற "யாழ்தேவி" நடவடிக்கையின் போது, தமிழர்களை அநாதரவாக்கி உயிர்களாகக் கருதி முப்படையினர் நடத்திய மூர்க்கத்தனமான, வாட்டுமிராண்டித்தனமான, சர்வதேச விதிகளை மீறிய கொடுமைகளைப் பார்த்தோம்.

யாழ்ப்பாணக் குடாநாட்டு மீதான எடுத்த தாக்குதல் ஒன்று நடக்குமாயின் முப்படையினரின் தீவிரமும், கொடுமையும் உச்சக்கட்டத்தை அடையும் என்று நிச்சயம் எதிர்பார்க்கலாம். அவ்வேளை தமிழர்கள் தங்களையும், தமது மண்ணையும் பாதுகாப்பதற்கு இதுவரை காட்டியதைவிட அதிக வலுவுடன் போராட வேண்டும். "யாழ்தேவி" நடவடிக்கையை தோற்கடித்தது போல புதிய தாக்குதலையும் எதிர் கொள்ள வேண்டும். அப்போது தான் மக்கள் தங்களையும் தமது மண்ணையும் பாதுகாக்க முடியும். இது விடுதலைப் புலிகளுக்குரிய கடமை மட்டுமல்ல. ஒவ்வொரு தமிழர்களின் கடமையும் ஆகும்.

தமிழர் சமூகத்திற்கு வாழ்வா, சாவா என்ற நிலையை ஸ்ரீலங்கா அரசு தோற்றுவித்திருக்கிறது. நாம் போராடினால் தான் நமக்குப் பாதுகாப்பும் வாழ்வும் என்ற நிலை உருவாகி உள்ளது. எனவே தனிப்பட்ட முறையிலும், இனரீதியிலும் ஏற்பட்டுள்ள ஆபத்தை ஒவ்வொரு தமிழரும் உணரவேண்டும். போராட்டத்தில் இணையவேண்டும். இல்லையேல் பூரண அழிவே விளைவாகும்.

---

கடந்த மாதம் 28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தொடக்கம் இம்மாதம் 5 ஆம் திகதி திங்கட்கிழமை வரை பெரும் போர்க்களமாக மாறியிருந்த புலோப்பளை, ஆலிப்பளை, கிளாலிப் பகுதிகளுக்கு இவ்வளவு விரைவில் செல்ல முடியும் என்று நாம் எண்ணியிருக்கவில்லை.

போர் முனையில் நடந்தவை நேரில் பார்க்க முடியவில்லை என்றாலும் —

போரினால் அப்பகுதிகளில் ஏற்பட்ட மாற்றங்களை, படையினர் அங்கு நியம் புரிந்து உருவாக்கிய அழிவின் காட்சிகளை மற்றவர்கள் பார்ப்பதற்கு முன்னர் நாம் காண வேண்டும் என்ற ஆவலுடன் செவ்வாய் பிற்பகலில் கிளாலி செல்லும் வழியில் முதலில் தெற்பெலி பண்டிதர் குடியிருப்பு அமைந்த பகுதியில் கால் பதித்தோம்.

அங்கிருந்து கிளாலியை அடைந்த போது பொதுமக்களின் உடைமைகளை இராணுவத்தினர் எவ்வாறு நாசம் செய்திருக்கின்றனர் என்பதைக் காணமுடிந்தது.

ஸ்ரீலங்கா அரசாங்கம் தமிழர்களுக்கும் அரசாங்கம் என்று சொல்லப்படுகிறது. அரசாங்கப் படைகள் என்றால் மக்களுக்கும், அவர் தம் உடைமைகளுக்கும் பாதுகாப்பு அளிக்க வேண்டும். ஆனால் ஸ்ரீலங்கா படைகள் தமிழர்களையும் அவர் தம் சொத்துக்களையும் அழிப்பதையே தமது "பணி" யாகக் கொண்டுள்ளன என்பது தெரிந்ததே.

படையினர் கிளாலிப் பகுதியில் மூன்று நான்கு தினங்கள் தங்கியிருந்து தமது "பணி"யைத் தாராளமாகச் செய்திருக்கிறார்கள்!

10 நாட்களுக்கு முன் கிளாலி படகுத் துறையும், கிளாலிப் பிரதேசமும் பெரும் சந்தடி மிக்க இடமாக இருந்தது. படகுப் பயணம் செய்வோரும், பொருள்களை ஏற்றி வரும் விவசாயிகளும், வாகன ஓட்டிகளும், வாகனங்களும், கடைகளும் என்றும் ஒரே அமளிப்படும் கிளாலி நாம் சென்ற போது அமைதியாக உறங்கிக் கொண்டிருந்தது.

சச்சரவு ஊடாக தெற்பெலி பண்டிதர் குடியிருப்புக்குச் சென்றபின் அங்கிருந்து கிளாலி ஆலிப்பளைப் பகுதிகளுக்குச் சென்றோம்.

செவ்வாய் முதல் திங்கள் வரையான ஏழு நாட்களுக்கு ஓயாத ஷெல் மற்றும் குண்டுத் தாக்குதல்கள் வேலி டொலிகள் என்பவற்றாலும் மிக மோசமான வான் தாக்குதல்களினாலும் அதிர்ந்து கொண்டிருந்த போர் முனையான அப்பிரதேசத்தில் அமைதி நிலவியது.

கிளாலிப் பகுதியை நெருங்கிய போது அங்கிருந்த காட்சிகளைக் கண்டதும் எம்மை அறியாமலே ஒருவித பய உணர்வு உருவாகியது. ஆனால் எமக்கு முன்பாகவே தமது தொழிலை செய்வதற்காக வீதிகளில் காணப்பட்ட சைக்கிள் விறகு விவசாயிகளைக் காண நேர்ந்ததும் எமக்கு ஒருவித தெம்பு பிறந்தது.

தெற்பெலி பண்டிதர் குடியிருப்புப் பிரதேசத்தில் வரவர ஷெல்கள் விழுந்து வெடித்த தடயங்களையும், அதற்றால் ஏற்பட்ட சேதங்களையும் பார்க்க முடிந்தது. அங்கு தங்கியிருந்த சுமார் 800 வரையான குடும்பங்கள் வெளியேறிச் சென்றிருந்தாலும் குடியிருப்பில் ஆழ்ந்த அமைதி நிலவியது. அருகில் ஷெல் தாக்குதலுக்கு இலக்காகி படுகாயமடைந்து மக்கள் மாடு ஒன்று வலியால் துடித்துக் கொண்டு நின்றதைக் கண்டோம்.

அங்கிருந்த குடும்பங்கள் வெளியேறிய வேளையில், குடிசை ஒன்றில் விடப்பட்ட நோயாளியான வயோதிபப் பெண் ஒருவர் இறந்து கிடக்கக் காணப்பட்டதாகவும், ஒரு வாரத்தின் பின்னர் அன்று தான் அவரது சடலத்தை எடுத்து, அடக்கம் செய்ய முடிந்ததாகவும் குடியிருப்புப் பகுதிக்குப் பொறுப்பான ஒருவர் எம்மிடம் கூறினார்.

### தற்காப்பு அரண்கள்

குடியிருப்புக்குச் சமீபமாக கிளாலித் துறையை நோக்கிச் செல்லும் வீதியால் இறங்கி நடந்தோம். வீதியின் இரு மருங்கும் தியினால் கருகிய வடுவமாகக் காட்சி தந்தன. அந்த வீதியில் இடது புறப் பகுதிவரை மட்டுமே கிளாலியில் படையினர் முன்னேறியிருந்ததை அங்கு படையினர் அமைத்திருந்த சிறுசிறு தற்காப்பு அரண்களில் மூலம் ஊகிக்க முடிந்தது.

முன்னேறிய இடங்களில் இராணுவத்தினர் அபகரித்த பொருள்களைக் கொண்டு அத்தகைய சிறுசிறு தற்காப்பு அரண்களை அமைத்திருந்தனர். சிறு கதிரைகள், தென்னை மட்டைகள், தரைகளில் சாய்ந்த வீடுகளிலிருந்த கதிரைகள் கதவுகள், வாங்குகள் என்பனவற்றைக் கொண்டும் அவர்கள் அரண்களை அமைத்திருந்தனர்.

### எங்கும் ஒருவித நெடி

எந்நேரமும் விடுதலைப் புலிகள் தரப்பில் இருந்து பெரும் தாக்குதலை எதிர்பார்த்திருந்த படையினருக்கு முன்னேறிய இடங்களில் பலமான அரண்களை அமைத்துக் கொள்ள அவகாசம் கிடைக்கவில்லைப் போல் தெரிகிறது.

ஆலிப்பளை, கிளாலி, புலோப்பளை பகுதிகளில் வீடுகள், சிறு கொட்டில்கள், கோவில், கடைகள், கைவிடப்பட்ட சைக்கிள்கள் என்பவற்றையும் அப்பகுதியில் வேலிகளை செடிகொடிகளையும் படையினர் எரித்து நாசம் செய்துள்ளனர். "பொஸ்பரஸ்" இரசாயனப் பொருள் கொண்டே அவை எரியூட்டப் பட்டிருக்க வேண்டும். அப்பகுதியில் காற்றில் ஒருவித நெடி பரவியிருந்தது. அப்பகுதியால் நாம் சென்ற போதும் (செவ்வாய் மாலையில்) எரிந்து புகைந்து கொண்டிருந்த படகுகளைத் தேடித் தேடி அழித்துள்ளனர். கரையோரம் நீரில் நின்ற படகுகளும் எரிக்கப்பட்டிருந்ததைக் காணமுடிந்தது.

நாம் அப் பகுதியில் நின்ற சமயம் அங்கு வந்த சில படகு உரிமையாளர்கள் தமது ஜீவனோபாயத்துக்கு உதவிய படகுகளின் நிலை கண்டு பதைபதைத்து நின்றதைக் காண முடிந்தது. "சண்டை தொடங்குவதற்கு இரண்டு நாட்களுக்கு முன் வாங்கினேன் இரு படகுகளை ... இப்போது இப்படி ஆகிவிட்டதே" — என்று வேதனை வெளிப்பட எம்மிடம் கூறினார் ஒரு படகு உரிமையாளர்.

படையினரால் பல கோடி ரூபா பெறுமதியான படகுகளை அழிக்க முடிந்தது. ஆனால் விரைவிலேயே மீண்டும் கடற் புலிகளின் பாதுகாப்புடன் புதிய பயணிகள் படகுகள் அந்தக் கடலை கடக்கப் போகின்றன.

கிளாலிக் கரையோரம் துறைமுகப் பகுதியை நோக்கிச் செல்லும் பாதைகள் கனரக வாகனங்களால் கிளறப்பட்டுள்ளன. கனரக வாகனங்கள் அங்கும் இங்குமாகச் சென்ற தடயங்கள் அப்பகுதி எங்கும் காணப்பட்டன.

படையினர் ஏவிய பீரங்கிக் குண்டுகளின் எஞ்சிய அடிப்பாகங்கள் பரவலாகக் கிடக்கக் காணப்பட்டன. அப் பகுதியைப் பார்க்க வந்த பொது மக்கள் சிலர் அவற்றைத் தம்முடன் எடுத்துச் சென்றதைக் காணமுடிந்தது. படையினர் பயன்படுத்திய உணவுப் பார்சல்கள், சொக்லேட்டுக்கள், மற்றும் பிஸ்கட் என்பவற்றின் வெற்றுப் பக்கெட்டுகள் அப் பகுதி எங்கும் நிலத்தில் பரந்து கிடக்கக் காணப்பட்டன.

புலோப்பளை, ஆலிப்பளைப் பகுதிகளிலும் வீடுகள் மற்றும் மக்கள் உடைமைகள் சேதமாக்கப்பட்டும், எரிக்கப்பட்டும் காணப்பட்டன, காலை நடைகள் பலவும் கொல்லப்பட்டுள்ளன. ஆடு ஒன்றைக் கொன்று உரித்து விடுதி அவசரத்தில் விட்டுச் சென்றிருந்ததையும் காணமுடிந்தது.

ஒரு வாரத்தில் படையினர் இப்பகுதியில் ஏற்படுத்திய அழிவுகள் அந்தக் கிராமங்களின் மக்களின் வாழ்வை பல வருடங்களுக்குப் பின் தள்ளிவிட்டன.

படையினர் இப்போது கிளாலிப் பகுதியிலிருந்து பின் வாங்கிப் போய்விட்ட போதிலும் அவர்கள் பதித்துச் சென்ற அழிவுத் தடயங்களைக் காண முடிகிறது. ★

## வழி நெடுகிலும் நெடி மூக்கை அரிக்கிறது

## "பொஸ்பரஸ்"

---

## கா. குமாரதாசன்
## க. ஸ்கந்தகுமார்

---

சென்ற வேளை மூக்கில் ஒருவித எரிவு உணர்ச்சி உண்டானது.

கிளாலித் துறை நோக்கி எழுதுமட்டுவாழில் இருந்து செல்லும் வீதியில் அமைந்துள்ள வித்தகப் பிள்ளையார் கோவில் இருந்த இடம் தெரியாமல் சாம்பல் மேடாகக் கிடந்தது. அந்த வீதியில் அமைந்திருந்த வெளி கிராம சேவையாளர் அலுவலகம் அமைந்திருந்த வீடு மட்டுமே தப்பியுள்ளது. 'கிராம சேவையாளர் அலுவலகம்' என எழுதப்பட்டிருந்த பலகை படையினரின் கண்ணில் பட்டதோ என்னவோ!

அந்த வீதியால் கிளாலிக் கரையை நோக்கி மெல்ல நடந்தோம். மிக அவதானமாக அடிமேல் அடிவைத்து நடந்தோம். அங்கும் இங்கும் தாறுமாறாக வீசப்பட்டுக் கிடந்த பொருள்களில் ஏதாவது ஒன்று எப்போதும் வெடிக்கலாம் என்ற அச்சம் எம்மை அவ்வாறு பார்த்துப் பார்த்து நடக்கவைத்தது.

### நீரில் நின்ற படகுகளும் எரிந்துள்ளன

கிளாலிக் கரையோரம் [illegible] படகுகள் [illegible] கிடந்தன. பிளாஸ்டிக் மற்றும் மரப் படகுகள் பல

## வாதுவவில தபால் வரும்

கொழும்பில் பொருள்கள் ஏற்றிக் கொண்டு நிற்கும் 'வாதுவ' கப்பல் அடுத்த வாரம் பருத்தித்துறைக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இக்கப்பலில் செயலகத்துக்கு ஒருதொகுதி உணவுப் பொருள்களும், தனியார் வர்த்தகர்களுக்கு நானாவித உணவுப் பொருள்களும் தபால் பொதிகளும் எடுத்து வரப்படுவதாக தெரியவந்தது.

## மண்எண்ணெய் கொள்வனவு கலந்துரையாடல்

அனைத்து பாடநோக்கு கூட்டுறவுச்சங்கத் தலைவர்கள், பொது முகாமையாளர்களுக்கான கலந்துரையாடல் இன்று வியாழக்கிழமை முற்பகல் 10. 30 மணிக்கு யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர் திரு. வை. செந்திநாதன் தலைமையில் யாழ். மாவட்ட கட்டுறவுச் சபை மண்டபத்தில் நடைபெறும்.

மண்எண்ணெய் கொள்வனவு தொடர்பான சில முக்கிய தீர்மானங்கள் இக் கலந்துரையாடலின் போது எடுக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## தி.மு.கவுடன் காங்கிரஸ் கூட்டுச் சேராது

'வரும் தேர்தல்களில் தி.மு.க வுட்னோ அல்லது அ.தி.மு.க வுடனோ காங்கிரஸ் கட்சி எந்த சூழ்நிலையிலும் கூட்டமைத்துக் கொள்ளாது', என்று தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் வாசனும் பாடி ராமமூர்த்தி நேற்று தெரிவித்தார். (உ-ம்)

---

### அரசின்..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தியாகத்தினால் அவனுடைய அந்த நோக்கம் இதறடிக்கப்பட்டது.

எதற்கெடுத்தாலும் போராட வேண்டியவர்களாகவே நாம் இருக்கிறோம். பலவித நெருக்கடிகளைப் புரிந்து கொண்டு அதற்கு ஏற்றவாறு மாணவர்களுக்கு கல்வி ஊட்ட வேண்டிய நிலையில் ஆசிரியர்கள் உள்ளார்கள்.

நாளுக்கு நாள், பொழுதுக்கு பொழுது ஊரடங்குச் சட்டம் அறிவிக்கப்படுகிறது. இவ்வாறான பலவித நெருக்கடிகளுக்கும் மத்தியிலேயே எமது வாழ்க்கை நடக்கிறது. பொம்மர்கள், புக்காரா போன்றவற்றின் தாக்குதல்களுக்கு மத்தியில் அந்த இத்தனையுடனும், ஏக்கத்துடனும் பாடசாலைகளுக்கு வரும் மாணவர்களை, ஆசிரியர்களே அவற்றையெல்லாம் அவர்களிடமிருந்து அகற்றி, மறைத்து கல்வி புகட்டி வருகின்றார்கள். இவ்வாறு செயற்பட்டு வரும் ஆசிரியர்களுக்கு எங்கள் ஒத்துழைப்பு எப்போதும் உண்டு — என்றார்.

முன்னதாக தமிழீழ கல்விக் கழக பொறுப்பாளர் திரு. இளங்குமரன் தமிழீழ தேசியக் கொடியை ஏற்றி வைத்தார்.

யாழ். மாவட்டக் கல்விப் பணிப்பாளர் திரு. இரா. கந்தராலிங்கம், தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. தமிழ்ச்செல்வன் ஆகியோர் மங்கள விளக்கேற்றினார்கள். தமிழ்மொழி வாழ்த்து பாடல் ஆசிரியர் கீதம் என்பனவும் இடம்பெற்றன.

"விளக்கு" மாத சஞ்சிகையின் முதல் பிரதியை தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையின் தலைவர் அருட்திரு பிரான்சிஸ் ஜோசப் அடிகளார் வெளியிட்டு வைக்க, வேம்படி மகளிர் கல்லூரியின் முன்னாள் அதிபர் செல்வி இ. இராஜரட்ணம் அதனை பெற்றுக் கொண்டார். தமிழீழ கல்விக் கழக துணைப் பொறுப்பாளர் திரு. பாலகுமார் உப்பட அதிபர்கள், ஆசிரியர்கள் பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இறுதியில் "விளக்கு" சஞ்சிகையின் ஆசிரியர் திரு. சிவசரவணபவன் (சிற்பி) நன்றியுரை தெரிவித்தார்.

(அ-162)

---

காற்றுள்ள போதே தூற்றிக்கொள்
நீர் கிடைக்கும் போதே சேர்த்துக்கொள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்

### வே. ந. சிவராசா

தென்னாசிய தெற்றைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், காலஞ்சென்ற திரு வீ. நடராஜா ஆசிரியர் தம்பதியரின் மகனும், யாழ். பல்கலைக்கழகப் பதிவாளராகவும், வடக்கு - கிழக்கு மாகாணசபையின் பிரதம செயலாளராகவும், இந்து சமய விவகாரத் திணைக்களத்தின் பணிப்பாளராகவும், நீதி அமைச்சின் கிரேஷ்ட உதவிச் செயலாளராகவும், கல்ஞாட்கி உதவி ஆணையாளராகவும் கடமையாற்றிய திரு. வே. ந. சிவராசா 27 - 09 - 1993 அன்று சென்னையில் காலமானார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் சென்னையில் நடைபெற்றன.

தகவல்:
மனைவி, சகோதரிகள்,
மைத்துனர்

"இலட்சுமி வாசல்",
தென்னாசிய தெற்கு,
கரவெட்டி. (27565)

## திருமதி இலட்சுமி அருணாசலம்

புங்குடுதீவு 7 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி இலட்சுமி அருணாசலம் நேற்று (06 - 10 - 93) காலமாகி விட்டார்.

இவர் பிரபல வர்த்தகர் அருணாசலத்தின் அன்பு மனைவியும், பாலசுப்பிரமணியம் (கனடா), சிவலோகநாதன் (டென்மார்க்) ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி மாமா பாலசுப்பிரமணியத்தின் மாமியாரும், பார்வதி, விசாலாக்கி, கிள்ளப்பிள்ளை, காலஞ்சென்ற செல்வம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று காலை 10 மணியளவில் திருநெல்வேலியில் உள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
வி. அருணாசலம்
(கணவன்)

பதிவுகாரர் ஒழுங்கை,
திருநெல்வேலி கிழக்கு,
திருநெல்வேலி. (27571)

## தம்பு தர்மலிங்கம்

கொக்குவில் கிழக்கை வதிவிடமாகக் கொண்டவரும் முன்னாள் மின்சார பொறியியலாளர் (இலங்கை மின்சார சபை, பின்னர் Walker & Sons, கொழும்பு) த. தர்மலிங்கம் 06-10-1993 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தனலக்ஷ்மி, தவமணி ஆகியோரின் அன்புக் கணவரும், தர்மசோகன் (ஆஸ்திரேலியா), தர்மினி (ஆஸ்திரேலியா), தனுஷினி (யாழ். பல்கலைக் கழகம்), தர்மவதனன் (U K) ஆகியோரின் பாசமிகு தந்தையும், புனிதரின் (ஆஸ்திரேலியா), குமுதவல்லி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமனும், ராஜதுரையின் (நந்தாவில்) அன்புச் சகோதரனும், திருமதி செல்லநாதன், திரு. நடராஜா, திருமதி Dr. நடராஜா, திரு. ஆனந்தராஜா, திரு. ஞானகந்தரம், காலஞ்சென்ற திரு. கனகசிங்கம் ஆகியோரின் மைத்துனரும், தரிஷினி, அர்ச்சனா, வைஷ்ணவி ஆகியோரின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று காலை 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவு செய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
த. தவமணி
(மனைவி)

"கணேஷ் வாசல்"
கொக்குவில் கிழக்கு (6519

## திருமதி தங்கம்மா சிவக்கொழுந்து

உரும்பராயை பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கம்மா சிவக்கொழுந்து நேற்று (06-10-93) காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற சிவக்கொழுந்துவின் அன்பு மனைவியும், தங்கேஸ்வரியின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற பொன்னுத்துரையின் (மான் குட்டி) அன்பு மாமியாரும், வடிவாம்பிகை பிரேம்குமார் (U.S.A.), தர்மாம்பிகை நடேசலிங்கம் (U.K.), அம்பிகைபாகன் (Canada), ஞானாம்பிகை (Canada), மதிஞானபாலன் (Canada), மோகன்தாஸ் (Canada) ஆகியோரின் பேரியும், சுரேசின் பூட்டியுமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று திருநெல்வேலி, பலாலி வீதி அம்பிகைபவனில் இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 3.30 மணிக்கு கொக்குவில் இந்து மயானத்திற்கு பூதவுடல் எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
தங்கேஸ்வரி பொன்னுத்துரை
(மகள்)

"அம்பிகை பவனம்"
பலாலி வீதி,
திருநெல்வேலி. (27572)

இப்பத்திரிகை நியூ உதயன் பதிப்பகத்தார் (பிரைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 49 இல இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 07 10 1993 இல் அச்சிடப்பெற்று வெளியிடப்பெற்றது

### பயங்கரவாதப் பிரச்சினையே உள்ளது; ஆனாலும்

# அரசியல் தீர்வு ஒன்றின்மூலமே சமாதானத்தை எட்ட வேண்டும்

### ஜனாதிபதி விஜேதுங்கா கூறுகிறார்

கொழும்பு, ஒக். 7

★ விடுதலைப் புலிகள் கடந்த வியாழக்கிழமை விடுத்த வன்செயல்கள் அரசியல் பிரச்சினையிலும் பார்க்க தீவிரவாதப் பிரச்சினையாக மாறிவிட்டது.

★ வடக்கு, கிழக்கில் உள்ள தற்போதைய பிரச்சினை விடுதலைப் புலிகளால் உருவாக்கப்பட்ட பயங்கரவாதப் பிரச்சினையேயாகும்.

★ எனினும் வடக்கு, கிழக்கில் அரசியல் தீர்வு ஒன்றின் மூலமே இறுதியாக சமாதானம் காணப்பட வேண்டும்.

★ சமாதானத்தை நிலைநாட்டுவதற்காக அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதற்கு அரசாங்கம் தயாராக இருக்கின்றது.

— இவ்வாறு ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க நேற்று கொழும்பில் தங்கள் சந்தித்த ஐரோப்பிய நாடாளுமன்றத் தூதுக் குழுவிடம் தெரிவித்தார்.

பிரிட்டன், இத்தாலி, ஜேர்மன், பிரான்ஸ், நெதர்லாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் பத்துப் பேர் இக்குழுவில் இடம்பெற்றிருந்தனர்.

அவர்களிடம் ஜனாதிபதி விஜேதுங்க மேலும் தெரிவித்தாவது:

★ மற்றவர்கள் மக்களைத் துன்புறுத்தும் போது அவர்களைப் பாதுகாப்பது அரசின் கடமையாகும்.

★ மக்களைப் பாதுகாப்பதற்காகவே வடக்கு - கிழக்கில் இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

★ பேச்சுவார்த்தைகளினூடாகவும் தேர்தல்களிலும் பங்கு பற்றுவதற்கு விடுதலைப் புலிகள் ஏன் அஞ்சுகிறார்கள்?

★ ஐரோப்பிய நாடுகளில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் தாயகம் திரும்பலாம். அவர்களுக்கு புனர் வாழ்வளிக்க அகதிகளுக்கான ஐ நா. காரியாலயம் தயாராகவுள்ளது.

— இவ்வாறு டி. பி. விஜேதுங்க குறிப்பிட்டார். (உ-எ-162)

## தென்மராட்சி மினிபஸ் சேவை மீண்டும் ஆரம்பம்

தென்மராட்சி, ஒக். 7

கடந்த வாரம் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளால் இடை நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தென்மராட்சி பகுதிகளுக்கிடையிலான மினிபஸ் சேவைகள் நேற்று முதல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தென்மராட்சி மினிபஸ் ஒன்றியத்தினர் அறிவித்துள்ளனர். (இ-117)

## கோபாலசாமியை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வெளியேற்றுவதை எப்படி தடுத்து நிறுத்துவது என்பது குறித்து ஆராய்ந்தனர்.

கட்சி உறுப்பினர்களின் விருப்பத்தை அலட்சியம் செய்து, கோபாலசாமியை கட்சியை விட்டு நீக்கினால் தி.மு.க. இரண்டாக உடையும் என நாஞ்சில் மனோகரன் எச்சரித்திருக்கிறார்.

கோபாலசாமியின் நெருங்கிய ஆதரவாளராகச் செயற்பட்ட நாஞ்சில் மனோகரன் அண்மையில் கட்சியிலிருந்து நீக்கப்பட்டது தெரிந்ததே. (உ-எ-6)

## இன்றைய..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பகுதி தேசிய விடுதலைப் போராட்டத்துக்கு உறுதுணையாக நிற்பதும் கல்வி மான்களின் கடமையாகும்.

### பொறுப்புடனும் துணிவுடனும்

எத்தனையோ இடர்களையும் தடைகளையும் எதிர்கொண்டு இந்தத் தேசியப் பணியில் எமது ஆசிரியர்கள் மிகவும் பொறுப்புணர்வுடனும் தேசியப் பற்றுணர்வுடனும் துணிவுடனும் செயலாற்றி வருவது கண்டு தான் பெருமை கொள்கிறேன். இந்நிலையில், எமது சமுதாய மேம்பாட்டின் ஏணிப்படிகளாகத் திகழும் இப்பெருந்தகைகளை ஏத்திப் போற்றி மதிப்பளிப்பது எமது கடமையாகும்.

உலகெங்கும் ஆசிரியர் சமூகத்தைப் பாராட்டும் நாளாக, அக்டோபர் 6 ஆந் நாள் உலக ஆசிரியர் நாளாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. உலக சமுதாயம் நன்றியுணர்வுடன் கொண்டாடிவரும் இந்நன்னாளில் நாமும் எமது ஆசிரியர் சமூகத்தைப் பாராட்டிக் கௌரவிப்பது சாலச்சிறந்ததாகும்.

தமிழீழத்தில் கல்வி நிலையை மேம்படுத்துவதைக் குறிக்கோளாகக் கொண்டு செயற்பட்டுவரும் தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையினர் தமிழீழத்தில் உள்ள ஆசிரியர் தாமை சிறப்பாகக் கொண்டாட முன்வந்திருப்பதனை மனமாரப் பாராட்டுகிறேன். தமிழீழ ஆசிரிய சமூகம் சிறப்புற்று வாழ எனது நல்வாழ்த்துக்கள்.

### விளக்கு மாத இதழ்

அத்துடன், தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் ஆசிரியர் தாண்மை விருத்திக் குழு, ஆசிரியர்களின் கற்பித்தல் முறைமைக்கு ஊக்கம் கொடுத்து உதவுகின்ற நோக்கில் விளக்கு என்ற பெயரில் மாத இதழ் ஒன்றை உலக ஆசிரியர் நாளில் வெளியிடுவதையிட்டும் பெருமகிழ்ச்சி யடைகிறேன். இந்த விளக்கு இதழ் கல்விப் பேரவைக்கு வெளிச்சம் காட்டி, தொடர்ந்து சிறப்பாக வெளிவர எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[illegible] அவர் தெரிவித்துள்ளார். (இ-'63-111)

## ஆசிரியர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாணவர்கள் ஆசிரியர்கள் அணிஅணியாகச் சென்ற காட்சி மனதைக் கவர்ந்தன.

மாணவர்கள் தத்தம் வீடுகளில் மாலைகளைக் கட்டி வந்து தமது ஆசிரியர்களுக்கு அணிவித்து கௌரவித்து மகிழ்ந்தனர்.

ஆசிரியர்களுக்கு மதிய போசனம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டதோடு பரிசுகளும் அளிக்கப்பட்டன.

பிற்பகலில் ஆறு கோட்டங்களிலும், அந்தந்தக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளரின் தலைமையில் ஆசிரியர் தின விழாக்கள் நடைபெற்றன. தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையின் பிரதிநிதிகள், விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பிரதிநிதிகள், மாணவர் அமைப்புப் பிரதிநிதிகள், பெற்றோரின் பிரதிநிதிகள், பழைய மாணவர் சங்கப் பிரதிநிதிகள் ஆகியோர் இவ்விழாக்களில் கலந்து கொண்டு உரையாற்றினர். (ஆ-5-163)

## கோபாலசாமிக்கு ஆதரவாக தீக்குளிப்பு!

செல்வன், ஒக். 7

கோபாலசாமியை வெளியேற்றுவதை எதிர்த்து நீராவியடி மாவட்டத்தைச் சேர்ந்த பன்னீர்செல்வம் (வயது 35) என்பவர் தீக்குளித்தார்.

தீக்காயங்களுடன் அவர் தேனி தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை — கோபாலசாமியின் தீவிர ஆதரவாளரான பாலையம்கோட்டை முன்னாள் எம். எல். ஏ. ஒருவரின் கார் தீக்கிரையாக்கப்பட்டது. (உ-எ)

## ஷெல் வீச்சு

ஏழாலை, ஒக். 7

பலாலி இராணுவ முகாமில் இருந்து ஏவப்பட்ட ஷெல்களால் கல்லாகம், மயிலணி வடக்கில் மூவர் காயம் அடைந்துள்ளனர். வீடுகள் சில சேதம் அடைந்தன.

நேற்று முன்தினம் இரவு இச் சம்பவம் இடம்பெற்றது.

முருகேசு பவானி (வயது 13) கணேசு ஜெயந்தி (வயது 24) புவனேந்திரம் மோகனராணி ஆகியோரே காயம் அடைந்தவர்கள் ஆவர்.

இரவு, வாகன வரி இல்லாதமையால், காயம் அடைந்தவர்கள் மோட்டார் சைக்கிளில் யாழ்ப்போதனா வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டனர்.

காயம் அடைந்தவர்களில் ஒருவர் ஆசிரியர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-15.46)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஒக். 7.

பூநகரி குளம், ஞானிமடம் பழைய இறங்கு துறை இராணுவ முகாம்களில் இருந்து நேற்று நண்பகல் தொடக்கம் வேதிவு இறங்கு துறை கரையோரப் பகுதியைநோக்கி தொடர்ச்சியாக ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இச்சம்பவத்தை அடுத்து சாவகச்சேரிப் பகுதியில் பதற்றம் நிலவியது.

கடைகளும் மூடப்பட்டன. (இ-15

அருள்மிகு
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
சாவகச்சேரி

## முக்கிய அறிவித்தல்

அன்புடையீர்!

08 - 10 - 93 வெள்ளி முதல் 10 - 10 - 93 ஞாயிறு வரை நடத்தவிருக்கும் மஹாநவசண்டி ஹோமம் மறு அறிவித்தல் வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்பதை அடியார்களுக்கு அறியத் தருகிறோம்.

பிரம்மஸ்ரீ ப. ஸகாகணபதி சர்மா,
தர்மகர்த்தா.
(27568)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org